## பொதுக்காலத்தின் பத்தொன்பதாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - B

## 2024-08-11

*(இன்றைய வாசகங்கள்:*

*அரசர்கள் முதல் நூலிலிருந்து வாசகம்* 19: 4-8,

*திபா* 34: 1-2. 3-4. 5-6. 7-8,

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 4: 30 - 5: 2,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 6: 41-51)

## திருப்பலி முன்னுரை:

*நிலைவாழ்வுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பத்தொன்பதாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு இயேசுவில் நம்பிக்கை கொண்டு நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கிறது. 'விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே' என்று இயேசு கூறியதால் யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள். அவர்களுக்கு பதிலளிக்கும் இயேசு, தன்னில் நம்பிக்கை கொள்வோருக்கு நிலைவாழ்வை வாக்களிக்கிறார். உலகு வாழ்வதற்காக இயேசு தன்னையே கையளிக்கிறார். இயேசு விண்ணகத் தந்தையிடம் இருந்து வந்தவர் என்ற நம்பிக்கையால் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ளும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*ஆற்றல் மிக்க இறைவா!*

*உமது போதனைகளைத் தங்களது வாழ்வாக கொண்டு பணிபுரிகின்ற திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் ஆகிய அனைவரும் தங்கள் வாழ்வை உமக்குரிய சாட்சிய வாழ்வாக்கிட வேண்டிய அருளைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*பாதுகாக்கும் தெய்வமே இறைவா!*

*நற்கருணை முழுமனித வாழ்வுக்குரிய உணவு என்பதை உணர்ந்து சமூகத்தில் பசி, பட்டினி இல்லாத சமூகமாக மலர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வழிகாட்டும் தெய்வமே இறைவா!*

*வானின்று இறங்கி வந்த உயிருள்ள உணவான இயேசுவை உட்கொண்டு அவரோடு இணைக்கப்பட்டு ஓர் உறவு சமூகத்தைக் கட்டி எழுப்ப வரமருள் வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*உறவின் நாயகனே இறைவா!*

*எங்களிடையே இருக்கும் சினம், சீற்றம், மனக்கசப்பு, பழிச்சொல் போன்ற தீய பழக்கங்களை விட்டு ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ் வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கத்தின் இறைவா!*

*பல்வேறு மொழி, சமயம், இனம், பண்பாடு ஆகியவற்றால் பரந்து விரிந்திருக்கும் எங்கள் நாட்டை ஆளும் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு உமது ஆசியை நிறைவாக பொழிந்தருள*

*வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*நீதியின் அரசராம் இறைவா,*

*உலகெங்கும் வன்முறை, தீவிரவாதம், உள்நாட்டு கலவரம், பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளோர் உமது உதவியை நாடவும், தீமையை வெறுத்து, நன்மையையும் நீதியையும் தேடி நல்ல வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*